வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-செங்கேனி பழனி

தேதி-6.10.2025 நேரம்- மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பீகாரில் நவம்பர் 6, நவம்பர் 11 ஆகிய தேதிகளில் 2 கட்டங்களாக சட்டமன்ற தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையம் இன்று அறிவித்துள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்பூரில், மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் பல உயிர்கள் பலியானது குறித்து பிரதமர் திரு நரேந்திரமோடி துயரம் வெளியிட்டுள்ளார்.

எரிசக்தி துறை வேகமாக மாறி வரும் நிலையில், நாட்டில் இயற்கை எரிவாயுவின் பங்கு மிக முக்கியமானதாக இருக்கும் என்று மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு ஹர்திப் சிங் புரி கூறியுள்ளார்.

புதுச்சேரியில் பான்டெக்ஸ் நிறுவனத்தின் தீபாவளி கைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனையை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார்.

*பீகார் தேர்தல் 1(9)*

பீகாரில் நவம்பர் 6, நவம்பர் 11 ஆகிய தேதிகளில் 2 கட்டங்களாக சட்டமன்ற தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையம் இன்று அறிவித்துள்ளது. தலைமை தேர்தல் ஆணையர் திரு ஞானேஷ் குமார் இன்று புதுடெல்லியில், தேர்தல் ஆணையர்கள் டாக்டர் சுக்பீர் சந்து, டாக்டர் விவேக் ஜோஷி ஆகியோருடன் இணைந்து இன்று மாலை புதுடெல்லியில் நடத்திய செய்தியாளர்கள் கூட்டத்தில் இதை அறிவித்தார். பீகார் மாநிலத்தில் மொத்தமுள்ள 243 சட்டமன்றத் தொகுதிகளில், முதல் கட்டத்தில் 121 தொகுதிகளுக்கும், 2 ஆம் கட்டத்தில் 122 தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெற உள்ளது. இதுகுறித்து ஒரு செய்தித் தொகுப்பு……

(வாய்ஸ்)

*பீகார் தேர்தல் 2 (16)*

(வாய்ஸ்)

பீகாரில் முதல் கட்ட சட்டமன்ற தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் வரும் 10 ஆம் தேதி தொடங்கும் என்றும், வரும் 17 ஆம் தேதி வரை வேட்பு மனுக்களை தாக்கல் செய்யலாம் என்றும் தலைமை தேர்தல் ஆணையர் திரு ஞானேஷ் குமார் அறிவித்தார். மறுநாள் அக்டோபர் 18 ஆம் தேதி வேட்பு

மனு பரிசீலனை நடைபெறும் என்றும், ஏற்கப்பட்ட மனுக்களை திரும்ப பெற, 20 ஆம் தேதி வரை அவகாசம் அளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இரண்டாம் கட்ட சட்டமன்ற தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் அக்டோபர் 13 ஆம் தேதி தொடங்கும் என்றும், நவம்பர் 6-11 ஆகிய தேதிகளில் பீகார் சட்டமன்ற தேர்தலில் பதிவாகும் வாக்குகள், நவம்பர் 14 ஆம் தேதி எண்ணப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

சட்டமன்ற தேர்தல் மிக வெளிப்படையாகவும், அமைதியான முறையிலும் நடைபெறும் என தலைமை தேர்தல் ஆணையர் கூறினார். வன்முறையை கொஞ்சம் கூட சகித்துக் கொள்ளாத அணுகுமுறை ஒன்றை கடைபிடிக்குமாறு மாவட்ட குற்றவியல் நீதிபதிகள், காவல்துறை கண்காணிப்பாளர்கள், மற்றும், அமலாக்க ஏஜென்சிகளுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

*பீகார் தேர்தல்* 3 (11)

22 ஆண்டு இடைவேளைக்கு பின்னர் பீகாரில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் மூலம், வாக்காளர் பட்டியல் தூய்மை பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளதை திரு ஞானேஷ் குமார் சுட்டிக் காட்டினார். முதல் முறையாக இம்முறை, பீகாரில், தொகுதிக்கு ஒரு

பொதுப் பார்வையாளர் நியமிக்கப் படுவார் என்றும், வாக்குச்சாவடிகளில் மொபைல் டெபாசிட் வசதிகள் வாக்காளர்களுக்கு வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

பீகாரில் சட்டமன்ற தேர்தல் தேதிகள் அறிவிக்கப் பட்டதை தொடர்ந்து, தேர்தலுக்கான மாதிரி நடத்தை நெறிமுறைகள் இன்று முதலே அமலுக்கு வந்துள்ளன. பீகார் சட்டமன்ற தேர்தல் அல்லாது, 7 மாநிலங்களுக்கு உட்பட்ட 8 சட்டமன்ற தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் தேதிகளும் அறிவிக்கப் பட்டுள்ளன.

*ராஜஸ்தான் தீ விபத்து* (14)

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்பூரில், மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் பல உயிர்கள் பலியானது குறித்து பிரதமர் திரு நரேந்திரமோடி துயரம் வெளியிட்டுள்ளார். அன்புக்குரியவர்களை இழந்து வாடும் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துக் கொள்வதாகவும், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய தாம் வேண்டுவதாகவும், சமூக ஊடகப்பதிவு ஒன்றில் பிரதமர் கூறியுள்ளார். மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, சுகாதார அமைச்சர் திரு ஜே பி நட்டா, உள்ளிட்டவர்களும் சம்பவம் குறித்து துயரம் வெளியிட்டுள்ளனர். ராஜஸ்தான் முதலமைச்சர்

திரு பஜன்லால் ஷர்மா சம்பந்தப்பட்ட மருத்துவமனைக்கு நேரில் சென்று நிரவரங்களை பார்வையிட்டார். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இயன்ற எல்லா உதவிகளும் வழங்கப்படும் என அவர் உறுதி அளித்தார். ஜெய்பூரில் உள்ள சவாய் மான்சிங் மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து விசாரிக்க 6 உறுப்பினர் உயர்நிலை குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர்.

*எஸ்டிக் மாநாடு* (13)

உலக அளவில் முக்கிய அறிவியல் ஆராய்ச்சி மற்றும் புதுமையாக்க நாடாக, இந்தியா அங்கீகாரம் பெற்று வருவதாக மத்திய அறிவியல்-தொழில்நுட்பத் துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார். நவீன அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் புதுமையாக்கம் தொடர்பாக, அடுத்தமாதம் புதுடெல்லியில் நடைபெற உள்ள, ESTIC மாநாடு குறித்து இன்று புதுடெல்லியில் நடைபெற்ற முன்னோட்ட நிகழ்ச்சியை அவர் தொடக்கி வைத்து பேசுகையில், இந்திய பொருளாதாரத்தின் தற்போதைய வளர்ச்சிக்கு, கடந்த 10 ஆண்டுகளாக அறிவியல்-தொழில்நுட்பத்திற்கு வழங்கப்படும் முக்கியத்துவமே காரணம் என்றார். உலக அளவில் இந்தியாவின் கவுரவத்தை உயர்த்துவதில். இந்திய அறிவியல் துறையினர்

அளித்து வரும பங்களிப்பை அமைச்சர் பாராட்டினார். தொழில்நுட்பத் துறையில் தற்போது இந்தியா மற்றவர்களை பின்பற்றுவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். எஸ்டிக் போன்ற மாநாடுகளால் அறிவியல் துறையில் திறமையுள்ள அடுத்த தலைமுறை இளைஞர்களை இனம் காண ஏதுவாகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். மத்திய அறிவியல்-தொழில்நுட்பத் துறை அமைச்சகம் உள்பட 13 அமைச்சகங்களும், கல்வி மற்றும், தொழில் நிறுவனங்களும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள எஸ்டிக் மாநாடு புதுடெல்லி பாரத் மண்டபத்தில் வரும் நவம்பர் 3 முதல் 5 ம் தேதி வரைநடைபெறும்.

*நிதி ஆயோக்* (14)

நடப்பு நிதியாண்டின் 4 ஆவது காலாண்டிற்கான, நிதி ஆயோக் அமைப்பின் வர்த்தக கண்காணிப்பு அறிக்கையை நிதி ஆயோக் தலைமை செயல் அதிகாரி திரு பி வி ஆர் சுப்பிரமணியம் புதுடெல்லியில் இன்று வெளியிட்டார். நாட்டின் மொத்த வர்த்தகத்தின் மதிப்பு, தற்போது 1.73 ட்ரில்லியன் டாலர் என்றும், இது ஆண்டுக்கு 6 சதவிகித அளவில் அதிகரித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். ஏற்றுமதியின் அளவு 823 பில்லியன் டாலராகவும், இறக்குமதி தொள்ளாயிரத்து 8 பில்லியன்

டாலராகவும் மதிப்பிடப் பட்டுள்ளதாக அவர் கூறினார். இந்திய சேவைத் துறையின் ஏற்றுமதி, 387 பில்லியன் டாலராக சாதனை அளவில் அதிகரித்து இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். நாட்டில், பலதரப்பட்ட உற்பத்தி வசதிகளை மேலும் விரிவுப்படுத்தி, வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை திரு சுப்பிரமணியம் வலியுறுத்தினார். உற்பத்தி துறையில் போட்டித் திறன், ஆராய்ச்சி வசதிகள், மற்றும், திறன் மேம்பாட்டு வசதிகளை அதிகரிக்க தேவை இருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இயற்கை எரிவாயு (18)

உலக அளவிலான எரிசக்தி துறையில் நிலவரங்கள் வேகமாக மாறி வரும் நிலையில், இந்தியாவில் இயற்கை எரிவாயுவின் பங்கு மிக முக்கியமானதாக இருக்கும் என்று மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு ஹர்திப் சிங் புரி கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில் இயற்கை எரிவாயு ஒழுங்கு முறை வாரியத்தின் 19 ஆவது நிறுவன நாள் விழாவில் உரையாற்றிய அவர், இயற்கை எரிவாயு என்பது நாட்டின் இன்றைய எரிசக்தி சூழலுக்கும், தூய எரிபொருள் எதிர்காலத்திற்கும் இடையில், பாலமாகவே திகழ்வதாக கூறினார். நம்பகமான, விலைமலிவான இயற்கை எரிவாயுவின் பயன்பாட்டினால் சுற்றுச்சூழல் மாசுபாடு மற்றும்

கார்பன் வெளியீட்டை குறைக்க ஏதுவாகும் என்றும் அவர் கூறினார். நாட்டில் தற்போது 1 கோடியே 55 லட்சத்திற்கும் மேற்பட்ட PNG இணைப்புகள் மூலம், வீடுகளுக்கு சமையல் எரிவாயு வழங்கப்படுவதாகவும், நாடெங்கிலும், 8 ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட CNG நிலையங்கள் மூலம் வாகனங்களுக்கு தூய எரிபொருள் வழங்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். எரிசக்தி துறையில் நாட்டின் இலக்குகளை முழுமையாக எட்ட அரசுக்கும், ஒழுங்கு முறை அமைப்புகள் மற்றும் தொழில் துறையினருக்கும் இடையே ஒத்துழைப்பு அவசியம் என்று அவர் மேலும் கூறினார்.

*ஜிஎஸ்டி பீகார்* 1 (5)

பிரதமர் திரு நரேந்திர மோடி கடந்த மாதம் 22 ஆம் தேதி அறிவித்த ஜிஎஸ்டி சேமிப்பு உற்சவத்தினால், நாடு முழுவதும், அனைத்து பிரிவு மக்களும் பயன் பெற்று வருகின்றனர். புதிய தலைமுறை ஜிடிஸ்டி சீர்திருத்தங்களால் பீகாரில் மக்களுக்கான வாய்ப்புகள் அதிகரித்து வருவது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு........

(வாய்ஸ்)

*ஜிஎஸ்டி பீகார்* 2 (16)

(வாய்ஸ்)

வேளாண்மை சார்ந்த மாநிலமான பீகாரை பொருத்தவரை வேளாண்மை, உணவு பதனீடு, பால்வளம், கைத்தறி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால் முக்கிய பலன்கள் எதிர்பார்க்கப் படுகின்றன. உரங்கள், நுண்ணூட்ட சத்துக்கள், மற்றும் வேளாண் கருவிகளின் விலை குறைவதால், விவசாயிகள் பயன் பெறுகின்றனர். பீகாரில் ஆயுஷ் மருந்துகள் மற்றும் தேன் உற்பத்தியாளர்களுக்கும் வரிக்குறைப்பினால் பலன் ஏற்பட்டுள்ளது. பீகாரில் அதிகமாக உற்பத்தியாகும் மக்கானா என்னும் தாமரை விதைகள் மூலம் தயாரிக்கப்படும் திண்பண்டங்கள் மீதான 12 சதவிகித ஜிஎஸ்டி தற்போது 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளது. பீகாரின் முசாபர்பூர் பகுதியில் விளையும் புகழ்பெற்ற ஷாஹி லிச்சி பழங்கள், மற்றும், பழரசம், ஊறுகாய் மற்றும் ஜாம் வகைகள் மீதான வரியும் 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளதால் சம்பந்தப்பட்ட உற்பத்தியாளர்களுக்கு 6 முதல் 7 சதவிகிதம் வரை சேமிப்பு கிடைக்கும். சிறு அளவில் செயல்பட்டு வரும் பல்வேறு உணவு பதனீட்டு நிறுவனங்களும் வரிக்குறைப்பினால் ஊக்கம் பெற்றுள்ளன. பீகார் மாநிலத்தின் பால் பண்ணை துறையிலும்

*ஜிஎஸ்டி பீகார்* 3 (5)

வரிக்குறைப்பினால் மூலதன நெருக்குதல் குறைந்து, கூட்டுறவு செயல்பாடுகள் வலுப்பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மாநிலத்தின் புகழ் பெற்ற மதுபனி ஓவியங்கள், பாகல்புரி பட்டு, மற்றும் சுஜினி பூ வேலைப்பாட்டு பொருட்கள் மீதான வரியும் குறைக்கப் பட்டுள்ளதால், கைவினை கலைஞர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

*புதுச்சேரி நெசவாளர்கள்* (9)

புதுச்சேரியில் பான்டெக்ஸ் நிறுவனத்தின் தீபாவளி கைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனையை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார். கண்காட்சியில் தரமான கைத்தறி ஆடைகள் தள்ளுபடி விலையில் விற்கப்படுவதால், இதனை மக்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். மறைமலையடிகள் சாலையில் உள்ள பான்டெக்ஸ் விற்பனை அரங்கில் நடைபெறும் இக்கண்காட்சியின் தொடக்க விழாவில், சட்டமன்ற உறுப்பினர் திரு நேரு, கூட்டுறவுத் துறை செயலர் திரு ஜெயந்த் குமார் ரே, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு யஷ்வந்தய்யா மற்றும் ஊழியர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

வானிலை (12)

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக இன்று தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நீலகிரி, கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரியிலும் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 12 ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர் பார்க்கப் படுகிறது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலத்தில் 14 சென்டி மீட்டர் மழை பதிவாகி உள்ளது. அரபிக் கடலில் உருவான சக்தி தீவிரப் புயல் நாளை காலை வாக்கில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மேலும் வலுக் குறையக் கூடும் என்றும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கிரிக்கெட் (5)

உலகக் கோப்பைக்கான மகளிர் ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் நியூசிலாந்து-தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையே, இன்று இந்தூரில்

நடைபெறும் போட்டியில், டாஸ் ஜெயித்து முதலில் ஆடும் நியூசிலாந்து மகளிர் அணி, சற்று முன் வரை, ------ ஓவர்களில், -------- விக்கெட் இழப்பிற்கு, -------- ரன் எடுத்திருந்தது.

நோபல் பரிசு (11)

மருத்துவத் துறைக்கான 2025 ஆம் ஆண்டின் நோபல் பரிசு, அமெரிக்க விஞ்ஞானிகள் Mary Brunkow, Fred Ramsdell, மற்றும் ஜப்பானை சேர்ந்த Shimon Sakaguchi ஆகியோருக்கு அறிவிக்கப் பட்டுள்ளது. தோல் உள்ளிட்ட வெளி உறுப்புகள், நம் உடலை தாக்கும் முயற்சியில் எப்போதும் ஈடுபட்டுள்ள கிருமிகள் இடமிருந்து, நம்மை பாதுகாப்பது எப்படி என்பதை கண்டுபிடித்ததற்காக, இவர்கள் இந்த விருதுக்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். வெளியில் இருந்து வரும் கிருமிகளையும், உடலின் சொந்த செல்களையும் தனித்தனியே அடையாளம் காண்பதில், நோய் எதிர்ப்பு கட்டமைப்பின் ஒழுங்குமுறை டி-செல்கள் முக்கிய பங்காற்றுவதை இவர்கள் கண்டுபிடித்ததால், புற்று நோய் உட்பட பல்வேறு நோய்களுக்கு புதிய சிகிச்சை முறைகள் சாத்தியமானதும் குறிப்பிடத் தக்கது.